Registered as a News paper     பக்கங்கள் - 08     விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு     மக்கள் நாளிதழ்

Eezhanatham

இலவச பிரதி

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 22 | 04. 06. 2004 | வெள்ளிக்கிழமை | ஓசை 29




## யாழ்.நெல்லியடி மயானத்தில் நாட்டுப்பற்றாளர் நடேசனின் புகழுடல் நேற்றுமாலை அக்கினியுடன் சங்கமம்!

(நமது நிருபர்)

நாட்டுப்பற்றாளரும், மூத்த தமிழ் ஊடகவியலாளருமான ஐயாத்துரை நடேசன் அவர்களின் தகனக் கிரியைகள் நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு நெல்லியடி வதிரி ஆலக்கட்டை மயானத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை அவரது இல்லத்திலிருந்த புகழுடல் மாணவர்களின் அணிவகுப் புடன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

போராளிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், உட்பட ஆயிரக்கணக்கானோர் அமரர் நடேசனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று பிற்பகல் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இரா.துரைரத்தினம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. ஈகைச் சுடரினை அமரர் நடேசன் அவர்களின் பாரியார் ஏற்றி வைத்தார்.

பின்பு புகழுட லுக்கு அவரது பிள்ளைகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பின்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தலைவர் இரா. துரைரெத்தினம் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கச் செயலாளர் சண்.தவராசா, வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் தயாபரன், மாணவர் பேரவை உறுப்பினர் கிருஸ்ணபிள்ளை, வீரசேகரி பத்திரி முகாமையாளர் கே. கந்தசாமி, மற்றும் ஊடகவியலாளர் தவச் செல்வன் , யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா,பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், சுரேஸ்பிரேமசந்திரன், ரவிராஜ் உட்பட பலர் இரங்கல் உரையாற்றினர். பின்னர் அங்கிருந்து வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபட்டு அங்கு தகனக் கிரியைகள் நடைபெற்றன.

# மட்டு. படுகொலைகள் தொடர்பாக படை தரப்பின் மீதே மக்கள் சந்தேகம்

## படைதரப்பு இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்கிறார் சேனாதிராசா.

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா படையினர் கட் டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறும் படுகொலைகள் தொடர்பாக பொது மக்கள் இராணுவத்தினரையும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுப டுவபர்களையுமே சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர் என மட்ட க்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராசா தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறும் படுகொலைச் சம்பவங்களையடுத்து அக்கொலையாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பாக விடுதலைப்புலிகளின் உதவியை சிறிலங்காப் படையினர் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக புதன்கிழமை வவுணதீவில் படையினர்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கொலையாளிகளை கைது செய்வதற்கு விடுதலைப்புலிகள் ஒத்துழைக்க வேண்டும்!

**-படை அதிகாரி லக்சிறி அமரதுங்க-**

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஆயுதங்களுடன் நடமாடும் நபர்கள் பற்றி விடுதலைப்புலிகள் அடையாளம் கண்டு தகவல் தந்தால் அவர்களை பொலிசாரின் உதவியுடன் கைது செய்ய முடியுமென மட்டக்களப்பு 23-3 படைக்கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க தெரிவித்தார். நேற்று விடுதலைப்புலிகளுடனான சந்திப்பின் போது கருத்து தெரிவித்த படைஅதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை அண்மைக் கால சம்பவங்கள் இங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையை வெகுவாகப் பாதித்துள்ளது.

இதனை தடுப்பதற்காகவே மேலதிக பொலிசாரையும், படையினரையும் அமர்த்தி பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாக கேணல் அமரதுங்க தெரிவித்தார்.

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கீரகல கருத்துத் தெரிவிக்கையில் கொலையாளிகள் விடயத்தில் பொலிசார் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் யாராவது போர் உபகரணங்களுடன் சோதனையின் போது பிடிபட்டால் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுப்போம் எனவும் குறிப்பிட்டார்.

## கிழக்கு பல்கலைக்கழக விரிவுரைகள் யூன் 14ம் திகதி முதல் ஆரம்பம்!

(சி.பி.ஹரிச்சந்திரா)

கிழக்குப் பல்கலைக்கழக சகல மாணவர்களுக்குமான விரிவுரைகள் இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதி வசதியுள்ள மாணவர்கள் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமையே சமூகமளிக்க வேண்டும்.

முன்னர் 1ம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 7ம் திகதி ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக நிருவாகத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## பாவனைக்குதவாத வாகனங்கள் மட்.மாவட்டத்தில் சேவையில்!

(செ.பேரின்பராசா)

கல்முனை-மட்டக்களப்பு நெடுஞ்சாலையில், பாவனைக்குதவாத வாகனங்கள் பல போக்குவரத்துச்சேவையில் ஈடுபடுவதால், பாதசாரிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

குறிப்பாக புகைகக்கும் வாகனங்கள் அதிகளவில் இந்த நெடுஞ்சாலைகளில் செல்வதால் வீதியில் பயணிக்கும் பாதசாரிகள் அவதியுறுகின்றனர்.

இவை தவிர முறையான இருக்கைகள் இன்றி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் வண்டிகள் மக்களை ஆடு, மாடுகளை கொண்டு செல்வது போன்று ஏற்றி இறக்குவதை காண முடிகிறது.

இவற்றை கண்காணிக்க வேண்டிய போக்குவரத்துப் பொலி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இன்றைய நாளில்

**உலகின் தலைசிறந்த ஓவியர் பபிலோ பிக்காசோ (25.10.1881-08.04.1973)**



20ம் நூற்றாண்டின் தன்னிகரில்லா ஓவிய மேதையாகத் திகழ்ந்து சமாதானத்தின் குறியீடாக வெண்புறாவை வரைந்து உருவாக்கி பெருமைக்குரியவர் இவர். இவரது ஒரு ஓவியம் 1901இல் நியுயோர்க்கில் 6.3 இலட்சம் டொலருக்கு விற்பனையாகியது. கற்பனை வரிகளைக்கொண்ட நவீன ஓவிய மரபின் பிதாமகன் பிக்காசோ ஆவார்.



நாட்டுப் பற்றாளர் நடேசன் அவர்களின் புகழுடல் நேற்று மாலை இறுதிக் கிரியைக்காக யாழ் நெல்லியடி ஆலங்கட்டை மயானத்திற்கு கொண்டு செல்ல முன்நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தின் போது..

# செய்தித் துளிகள்

## யப்பான் உதவியுடன் மின்சார வசதி

(நமது நிருபர்)

வடக்குக்கிழக்கு மாகாணத்திற்கு ஜப்பான் நாட்டின் உதவியுடன் மின்சாரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 3200 குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபா செலவில் மின்சாரம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஜப்பான் நாட்டு அதிகாரிகளுக்கும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுக்குமான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

## வடக்கு கிழக்கில் 2000 இடை விலகல் சிறார்களுக்கு பயிற்சி நெறி

(விரி.சகாதேவராஜா)

''யுனிசெவ்'' நிறுவன அனுசரணையுடன் வடகிழக்குப் போரில் பாடசாலைக்கல்வியை இழந்த சிறுவர்களுக்குப் பயிற்சி வழங்கும்திட்டத்தை வலயக்கல்விப்பணிமனைகள் மேற்கொண்டு வருகின்றது.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட வகுப்புக்களைப் பார்வையிட கொழும்பிலிருந்து ''யுனிசெவ்''தொடர்பாடல் அதிகாரி ஜெ.'.வ் கீலே கடந்த செவ்வாயன்று விஜயம் செய்தார். அவர் கல்குடா , மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, சம்மாந்துறை போன்ற வலயங்களுக்கு விஜயம் செய்து செயல்திட்ட உண்மை நிலை பற்றி நேரில் கண்டறிந்தார்.

மட்டு, அம்பாறைமாவட்டங்களில் சுமார் 2000 சிறுவர்கள் (இடைவிலகல்) மீளச்சேர்க்கப்பட்டு பற்றிப்பிடித்தல் வகுப்புகளில் கல்வி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். அக்கரைப்பற்று வலயத்தில் ஒலுவில் பாடசாலையையும். சம்மாந்துறை வலயத்தில் வளத்தாப்பிட்டி பாடசாலையையும் ஜெ.'.வ். கீலே பார்வையிட்டார். கூடவே விபரண ஆய்வும் இடம் பெற்றது.

## தையல் இயந்திரங்களை வழங்கினர்

விரி.சகாதேவராஜா)

நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மயோன் முஸ்தபா, ஏ.அசீஸ் ஆகியோர் 26 தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளனர். தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுதிட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்துஇவை வழங்கப்பட்டுள்ளதாக நாவிதன்வெளிப்பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் தெரிவித்தார். மயோன் முஸ்தபா 18 தையல் இயந்திரங்களையும். அ. அசீஸ்08தையல் இயந்திரங்களையும் வழங்க நிதி ஒதுக்கீடு செய்திருந்தனர்.

## யுனிசெப் அதிகாரி சம்மாந்துறை விஜயம்

(விரி.சகாதேவராஜா)

''யுனிசெவ்'' நிறுவன தொடர்பாடல் அதிகாரி ஜெ.'.வ் கீலே சம்மாந்துறை வலயத்தில் இயங்கிவரும் வளத்தாப்பிட்டி அ.த.க.பாடசாலைக்கு விஜயம் செய்தார். அவரை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ தௌபீக், பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.சலாம், முறைசாராக் கல்விப்பணிப்பாளர்களான விரி.சகாதேவராஜா,எம்.ஏ. றசூல் ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர்.கடந்த போர்ச்சூழல் காரணமாக சம்மா ந்துறைவலயத்தில் 450 சிறுவர்கள் பாட சாலைக்கல்வியை இழந்தனர். இவர்களு க்கென 18 நிலையங்களில் 36 ஆசிரியர்களை அமர்த்தி பற்றிப்பிடித்தல் செயல் முறை நடாத்தப்பட்டு வருகிறது என பணிப்பாளர் தௌபீக், அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

## செய்தியால் பலன்

(எஸ். ரவீந்திரன்)

களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலையில் நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு சம்பந்தமாக வைத்தியசாலை வட்டாரங்கள் அடிக்கடி ஈழநாதம் பத்திரிக்கைக்கு சுட்டிக்காட்டியதையடுத்து. நேற்று ஒரு தொகுதி மருந்துப் பொதிகள் லொறிமூலம் வந்தடைந்துள்ளதாக வைத்தியசாலையின் மருந்தகர் திருமதி எஸ். வித்தியாதரன் தெரிவித்தார்.

# கிழக்குப்படு கொலைகளின் பின்னால் இராணுவம், அரசினது வலுவான கரங்கள்

(நமது நிருபர்)

கிழக்கு தமிழர் தேசியத்தின் பால் நின்று தமிழர் தேசியத்தை உள்ளூரிலும், உலகிற்கும் வெளிப்படுத்தி வந்த ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டமை அதிர்ச்சி தரும் செய்தியாகவே உள்ளது. கருணா என்ற தனிநபரினால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடி நிலை தணிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கில் நிகழ்ந்து வரும் படுகொலைகளில் இறுதியாக ஜி.நடேசன் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றான்.

இது பத்திரிகையாளர்களுக்கும், அவர்கள் பிரதிபலிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் விடுக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய சவாலும், அச்சுறுத்தலும் ஆகும். கருணாவினால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடியைச் சாட்டாகக் கொண்டு தமிழ் இன எதிர்ப்புச் சக்திகள் மேற்கொள்ளும் இன ஒழிப்பு நடவடிக்கையே இது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஏனெனில், இதுவரை இடம்பெற்றுள்ள போராளிகள், பொதுமக்கள், கல்வியியலாளர், ஊடகவியலாளர் ஆகியோரின் படுகொலைகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரதும், பொலிஸாரினதும் பிரசன்னம் மிக்க இடங்களிலேயே இடம் பெற்றுள்ளன.

கொலையாளிகள் இராணுவரோந்துகள், காவலரண்கள், தடைமுகாம்கள் என்பவற்றுக்கூடாகவே வந்து படுகொலைகளை மேற் கொண்டுவிட்டு தப்பி ஓடியுள்ளனர். இக்கொலைகளுக்குப் பின்னால் ஸ்ரீலங்கா இராணுவத்தினதும், அரசினதும் வலுவான கரங்கள் உண்டென்றே உணர்கின்றோம். இதுவரை இடம் பெற்றுவிட்ட அத்தனை படு கொலைகளையும் கண்டும் கேட்டும் மௌனமாக இருக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நம்பகத்தன்மையும் கேள்விக்குஉள்ளாகி வருகின்றது. கொலையாளிகளைக் கண்டுபிடிக்காது இருப்பதன் மூலம் தமிழர்களுக்கு எதிரான சக்திகளின் பக்கம் அதுசாயத் தொடங்கியிருக்கின்றதா? என்றே ஐயப் படவேண்டியுள்ளது. சரியான முறையில் தனது கடமையைச் செய்யாது இருப்பின் தொடர்ந்தும் கண்காணிப்புக் குழு பணியில் ஈடுபடத்தான் வேண்டுமா? என்பதே விசனம் தரும் கேள்வியாக உள்ளது

# நடேசன் படுகொலைக்கு புத்தி ஜீவிகள் கண்டனம்

(நமது நிருபர்)

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலையானது கருத்துச் சுதந்திரத்துக்கும், ஜனநாயக முறைமைக்கும் விடுக்கப்பட்ட ஓர் அச்சுறுத்தல் என்று புத்தி ஜீவிகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்கள். குறிப்பாக நாட்டில் சட்டமும், ஜனநாயகமும் உறுதி செய்யப்பட வேண்டுமென்று கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான றொகான் எதிரி சிங்க கூறுகின்றார்.

நடேசனின் படுகொலையானது ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் புதைக்கும் செயலாகவே காணப்படுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார். இதனை யார் செய்திருந்தாலும், எந்தத் தரப்பினர் செய்திருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டுமென்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். நடேசனின் படுகொலை வடக்கு-கிழக்கின் இயல்பு நிலைக்கு ஒரு அச்சுறுத்தலென்று சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் இணை அமைப்பாளர் சுசந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

# நடேசன் படுகொலை செய்யப்பட்டமை தமிழினத்தின் குரலை நசுக்கும் செயல்

## யாழ்பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(நமது நிருபர்)

தமிழ்த் தேசிய இனத்திற்காக குரல் கொடுத்து வந்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டது ஊடகத்துறைக்கு மட்டுமல்ல தமிழ் இனத்திற்குப் பேரிழப்பாகும். தமிழீழ தேசியத் தலைமையின் அசைக்க முடியாத நம்பிக்கையையும், தமிழ்மக்கள் மீது அளவில்லாத பற்றும் உடையவரான ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டமை தமிழினத்தின் குரலை வேரோடு சாய்க்க எடுத்துள்ள முயற்சியாகும். இதனை தமிழினம் ஒரு போதும் சகித்துக் கொள்ளாது.

ஊடகவிய லாளர்களை கொல்வதன் மூலம் தமிழினத்தை அடிமைப்படுத்த முடியாது என்பதை துரோகிகள் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் உயர் பதவியான ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரால் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்த முடியாவிட்டால் விடுதலைப் புலிகளிடம் தன்னாட்சி அதிகார சபை என்னும் இடைக்கால நிர்வாக அலகைக் கையளிக்கவேண்டும்.புலிகள் இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்றால் சிறந்த நிர்வாகத்தை நடத்திக் காட்டுவர். தொடரும் கொலைகளை தடுப்பர் என்பதை உலகறியும் நாடறியும் இதனையே நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்

## காங்கிரஸ் தலைவி சோனியாவுடன் கதிர்காமர் கலந்துரையாடல்

(நமது நிருபர்)

இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சுமார் 30 நிமிடம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தலைவியுடனான சந்திப்பிற்கு முன்னர், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் முன்னாள் பிரதமர் வாஜ்பாயை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக தமிழக பத்திகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நிமலராஜன் வரிசையில் ஐ.பி.சி இன்றுமொரு உறவை பிரிந்து நிற்கிறது

(நமது நிருபர்)

மூத்த ஊடகவியலாளர், ஐ.பி.சி. தமிழின் மூத்த குடும்ப உறுப்பினர் ஜி.நடேசன் அவர்களின் இழப்புச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். வார்த்தைகள் அற்று விறைத்துப் போனோம். தமிழ்த் தேசியத்தின் பற்றுடன் செயற்பட்டுவந்த ஜி.நடேசன், ஸ்ரீலங்கா அரசால் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை அனைத்துலக நாடுகளுக்கு வெளிக்கொண்டு வந்த ஒரு செய்தியாளர். செய்யும் பணியை செவ்வனே செய்ய வேண்டும் என்பதில் தளராத உறுதியுடன் செயற்பட்டு வந்தவர். ஐ.பி.சி. தமிழின் செய்தித் துறையில் பெரும் பங்காற்றிய ஒரு மனிதர். இத்தகையதோர் எமது ஊடகவியலாளரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையை ஐ.பி.சி தமிழ் வன்மையாகக் கண்டிக்கிறது. ஐ.பி.சி. தமிழின் முன்னாள் யாழ்ப்பாணச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் வரிசையில் ஐ.பி.சி. இன்னொரு குடும்ப உறுப்பினரை அராஜகத்துக்குப் பலிகொடுத்துள்ளது. இலங்கையில் அனைத்துலக அனுசரணையுடன் சமாதானமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு சூழ்நிலையில், ஊடகவியலாளர் ஜி.நடேசன் அராஜகவாதிகளால் கொலை செய்யப்படுவதற்கான பின்னணி குறித்து ஐ.பி.சி. சந்தேகம் வெளியிட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டு-அம்பாறை மாவட்டத்தில் இயல்பு வாழ்வை மீண்டும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டு வரும் ஒரு சூழ்நியைில், ஜி.நடேசன் மீதான கொலை இத்தகைய முயற்சிகளுக்கு பெரும் பாதிப்பினையே ஏற்ப டுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## புதிய ஜனநாயக் கட்சி கண்டனம்

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தின் ஆற்றலும். துணிவும் மிக்க பத்திரிகையாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டமை, அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த கவலைக்கும் உரியதாகும். இக்கொலை, பத்திரிகையாளர் மீதான மற்றொரு காட்டு மிராண்டித்தனத்தை வெளிப் படுத்தியுள்ளது. இதனை ஆயுதம் ஏந்திய தரப்பினர் செய்தாலும் அத்தகையோரைப் புதிய ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அனைத்துப் பத்திரிகையாளர்களுடன் இணைந்து நின்று எமது கட்சி துயர் பகிர்ந்து கொள்கின்றது. நடேசனின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

## சந்திரிகா அம்மையாரின் ஈனச் செயற்பாட்டின் வடிவமே படுகொலை

(நமது நிருபர்)

எமது தேசிய விடுதலைப்போராட்டத்தின் எழுச்சியினை உண்மையோடும் நேர்மை யோடும் வெளிக்கொணர்ந்த மூத்த பத்திரிகையாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டமை மிகுந்த வேதனைக்குரியது. போராட்ட காலத்திலும் சரி சமாதான கால கட்டத்திலும் சரி, தமிழர் தரப்பு போராட்ட நியாயப்பாடுகளை பேனா முனையில் வெளியுலகிற்கு கொண்டுவந்தவர் பத்திரிகையாளர் நடேசன். தேசிய விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும் சந்திரிக்கா அம்மையாரின் ஈனச் செயற்பாட்டின் ஒரு வடிவமாகவே இந்தப் படுகொலை இடம் பெற்றுள்ளது. அன்று அம்மையாரின் ஆட்சிக்காலத்திலேயே உண்மை யோடும் நேர்மையோடும் செயற்பட்ட நிமலராஜன் இராணுவத்தினதும் கைக்கூலிகளினதும் உதவி யோடும் கொல்லப்பட்டார்.

மீண்டும் அதே கைங்கரியமே தற்

தமிழீழ மாணவர் பேரவை

போதைய ஆட்சியில் ஆரம் பிக்கப்பட்டிருக்கின்றது. கல்வி மான்களையும் புத்தி ஜீவிகளையும் படு கொலை செய்வதனூடாக தமிழினத்தை நசுக்கிவிடலாம் எனக் கனவு காணும் அம்மையார் மீண்டும் இந்த மண்ணில் போர் தொடங்குவதற்கே வழிசமைத்துள்ளார் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழர் படுகொலை செய்யப்படுவதும் அதனைத் தடுக்க முடியாது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் இருப்பும், இருப்புக்கான அர்த்தத்தை விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது. தமிழர் கொலை செய்யப்படுவதனைத் தடுக்க முடியாத கண்காணிப்புக் குழுவும் சர்வதேச உலகமும் தமிழர் தாயகப் பிரதேசங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

# போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைப்புச் செய்வது அவசியம்.

## -பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி-

(எம்.யுவராஜ்)

கடந்தகால போர்ச்சூழல் காரணமாக எமது பிரதேசங்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. சமாதானச் சூழல் ஏற்பட்ட பின் துரித கதியில் புனரமைப்பு வேலைகள் நடைபெறும் என எதிர்பார்தோம் ஆனால் அவை நடைபெறவில்லை.

இவ்வாறு அண்மையில் மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப்பிள்ளையார் ஆலய கும்பாவிஷேக மலர் வெளியீட்டு விழாவில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் செல்வி.க. தங்கேஸ்வரி தெரிவித்தார்.

மலர்க்குழுத் தலைவி திருமதி.கோ.சின்னையா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தங்கேஸ்வரி தொடர்ந்து பேசுகையில்

இதுவரை செய்தது திணையளவு இனிமேல் செய்ய வேண்டியது பனையளவு நமது மக்கள் வறுமையில் உழன்றாலும் போர்க்கால அனர்த்தங்களில் சித்திரவதைப் பட்டாலும் இறைவனை மறப்பதில்லை. ஆலயப்பணிகளையும் புறக்கணிப்பதில்லை. ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதில் கவனம் செலுத்துகின்றனர்.

ஏழைக் கிராமமான ஆறுமுகத்தான் குடியிருப்பு மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் மகா கும்பாவிஷேகத்தை நடாத்தி சிறப்பு மலரும் வெளியிடுவது இதற்கு காரணம் என தமதுரையில் குறிப்பிட்டார்.இந் நிகழ்வில் இராம கிருஷ்ண மிஷன் சுவாமி அஜராத்மானந்தாஜியும் உரை நிகழ்த்தினார்.

# மட் / மாவட்டத்தில் உலக வங்கி உதவியோடு வீட்டுத் திட்டம்

(நமது நிருபர்)

கடந்த காலங்களில் யுத்தத்தினால் அழிவுற்ற வடக்கு கிழக்கு மாவட்ட மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் உலக வங்கி வீட்டுத் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளது.

இந்தத் திட்டத்தில் கூடுதலாக பாதிக்கப்பட்ட கிராமங்கள் முதல் முறையாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வுள்ளது.இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, தோணி தாண்ட மடு, மீராவோடை, வெலிக்காக்கண்டி போன்ற கிராமங்களில் இத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களில் 10,000 குடும்பங்கள் மீளக் குடியேறியுள்ளதோடு இவர்களுள் 6,000 பேருக்கு 25,000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ள போதிலும் உலக வங்கி இவ்வாறான வீட்டுத் திட்டங்களையும் வழங்குவது குறித்து உலக வங்கி பிரதிநிதிகள் ஆராய்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வலயத்தின் அபிவிருத்திக்கு பத்து லட்சம் ரூபா

(விரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய ஆரம்பகல்வி அபிவிருத்திக்கு 10லட்சரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் 05 ஆரம்பப்பாடசாலைகள் வளம் பெறவுள்ளன என்றுசம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.தௌபிக் தெரிவித்தார்.

வளத்தாப்பிட்டி அ.த.க பா. அன்னமலை ஸ்ரீசக்தி வித்தியாலயம், இறக்காமம் அமீர்க்கலிபுரம் அ.மு.க.பா.,கல்லரிச்சல் முஸ்லிம் வித்தியாலயம் செந்நெல் ஷாஹிரா வித்தியாலயம்.ஆகிய5 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும்

ஆரம்ப வகுப்புகளுக்கு. சுவரிட்டு ஒதுக்குதல், வகுப்புகளை பிரித்துஅடைத்தல், வகுப்பறையை அழகுபடுத்தல். போன்ற பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுத்தச் செல்லப்படவிருக்கின்றன.

இதே போன்று அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய வலயங்களுக்கும் தலா10 லட்ச ரூபாவை கல்வியமைச்சு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# மட் மாவட்டத்தில் 13951 பேர் மதுபாவனைக்கு அடிமை ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி13951பேர் மதுபாவனைக்கு அடிமையாயிருக்கின்றனர். இவர்களை இதிலிருந்து மீட்கும் நோக்குடன் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக 487போதைப்பொருள் விழிப்புணர்வு செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக 2827 பேர் போதைப் பொருள் பாவனையைக் கைவிட்டு இருப்பதுடன் சட்ட விரோதமான 150 மதுபான உற்பத்தி நிலையங்கள் தடை செய்யப்பட்டிருப்பதாகவும், மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திபிரதியானையாளர் தெரிவித்திருக்கிறார். சிகரெட், மதுபானம், மற்றும் போ தைப் பொருள் என்பன சமூகத்தை மேலும் வறுமைநிலைக்கு தள்ளி விடுவதால் பொது மக்கள் புகைத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு தர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மருதமுனை கலைஞர் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(ஜெஸ்மி)

மருத முனையிலுள்ள அனைத்து கலையிலக்கியத்துறை சார்ந்தவர்களையும் உள்ளடக்கிய கலைஞர் ஒன்றியம் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் அண்மையில் அங்குராற்பணம் செய்யப்பட்டது.

எதிர் காலத்தில் மருதமுனைக் கிராமத்தில் உள்ள எழுத்தாளர்களைக் கௌரவித்தல், அவர்களின் கலை இலக்கிய நிகழ்வுகளையும் வெளியீடுகளையும் செய்தல், இரங்கற் கூட்டங்களையும் பிரசுரங்களையும் வெளியிடுதல், போன்றன இவ்வமைப்பின் நோக்கங்களாக மொழியப்பட்டன.

பின்வருவோர் அமையத்திற்கென ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- மருதமுனை மஜீத், இணைச் செயலாளர்:-டீன் கபூர், மருதமுனை விஜிலி, பொருளாளர்:- மருதூர் பாரி, நிர்வாகக் குழு அங்கத்தவர்கள்:- மருதூர் ஹஸன், எம். எச். ஏ கரீம், அறநிலா, கலீலூல் றகீம் றகுமான் ஏ.ஜெமீல், அம்ரிதாஏயெம், மருதூர் அலறி, ஜெஸ்மி எம்.மூஸா, எம்.ஐ.எம்.வலீத் ஆகியோராவர்.

# பரீட்சாத்திகள் கவலை

(நமது நிருபர்)

கடந்த வருடம் இறுதிப் பகுதியில் புகையிரத நிலையங்களுக்கு அதிபர்களை இணைத்துக் கொள்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்டு அவர்களுக்கு எழுத்து மூலப் பரீட்சையும் நடாத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் எந்த வித முடிவுகளும் வெளியாகாததையிட்டு பரீட்சாத்திகள்கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின்போது இந்த விண்ணப்பம் கோரப்பட்டு பரீட்சையும் நடந்தமையால் இந்தமுடிவுகள் வெளியிடப்படாது அதிபர்கள் நியமிக்கப் படுவார்களோஎன்ற சந்தேகமும் தோன்றியுள்ளது.

# நாட்டுப் பற்றாளர் நடேசனுக்கு இரு பெரும் அமைப்புகள் அஞ்சலி

(விரி.சகாதேவராஜா)

காலஞ்சென்ற நாட்டுப் பற்றாளர் நடேசனுக்கு அஞ்சலி செலுத்தி அம்பாறை மாவட்டத்திலிருந்து இருபெரும் அமைப்புக்கள் இரங்கல்மடலை குடும்பத்தினருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அம்பாறைமாவட்ட தமிழர் மகா சங்கம் மற்றும்அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் என்பனநேற்று இரங்கற் செய்தியை அனுப்பி வைத்தன.தமிழர் மகாசங்கம் சார்பில் செயலாளர்சிவ ஸ்ரீசிவ ஞான செல்வ ஐயரும் பொது ஊழியர் சங்கம்சார்பாக தலைவர் எஸ். லோகநாதனும் ஒப்பமிட்டு அனுப்பியுள்ளனர்.

அவற்றில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது.

தமிழ் ஊடகவியலாளர்களின் குரல்வளையை நசுக்கும் சதித்திட்டத்தின் ஒரு அங்கமாகவே நடேசனின் படுகொலையைப் பார்க்கின்றோம்.

தமிழினத்தின் ஒட்டு மொத்தமான குரலாக ஒலித்த திரு. நடேசனின் கட்டுரைக்காக வார இதழைப் பார்ப்பவர்கள் நாம். தமிழுணர்வுடன் துணிந்து யாருக்கும் சோரம்போகாது எழுதக்கூடியவர் அவர்

புகழுக்கும் பொன்னாடைக்கும் ஆலாய்ப்பறக்கும் இச் சமூகத்தில் எதனையும் விரும்பாமல் எழுத்துச்சேவைசெய்த அவரை அம்பாறைமாவட்டம் சார்பாக சாந்தியடைய இறைஞ்சு கிறோம்.அவரது இழப்பு இலங்கைவாழ் தமிழினத்திற்குமாபெரும் இழப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி பிரதமர் தீகவாபி விஜயம்

(விரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் இன்று வெள்ளிகிழமை அம்பாறைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் குழு புனித தீகவாபிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து தீகவாபி பாரம்பரிய விகாரையில் இறைவழிபாடு செய்யவுள்ளனர்.

குழுவினருடன் அமைச்சர்கள் சிலரும் விஜயம் செய்யவுள்ளதாக கூறப்படுகிறது.

இவர்களது வருகையை முன்னிட்டு ஜீன்1ம் திகதி முதல் அம்பாறைப் பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுவருகிறது.விசேட அதிரடிப் படையினர் குழுவாக ரோந்து நடவடிக்கயில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறக்காமம் பிரதேசம் முற்றாக பாதுகாப்புப் படையணி வசம் உள்ளது. இதேவேளை கடந்த (செவ்வாய்) அம்பாறைக்கு ஜே.வி.பி. தலைவர் விமல்வீரவன்ச விஜயம் செய்திருந்தார்.

# மாவடிவேம்பு மத்திய மருந்தகத்தில் உள நோய் புனர்வாழ்வு நிலையம் திறப்பு

(எம்.யுவராஜ்)

மாவடி வேம்புமத்திய மருந்தகத்தில் உள நோய் புனர்வாழ்வு நிலையம் நேற்றுக்காலை 11மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தியினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வில்லியம் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் எம். தேவராஜன் விசேட உளநோய் வைத்திய நிபுணர் டாக்டர்.எம். கணேசன். மாவட்ட வைத்திய அதிகாரி தட்சணாமூர்த்தி சுகாதாரப் பரிசோதகர் நவலோகிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிலையம் சுமார் 20 படுக்கை வசதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளதோடு இவை மட்டகளப்பு போதனா வைத்தியசாலை மனநோய்ப் பிரிவின் கீழ் இயங்கும் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் தேவராஜன் தெரிவித்தார்.

மாவடிவேம்புக் கிராமத்தில் இவ்வைத்தியசாலை திறப்பது சம்பந்தமாக அண்மைக்காலமாக இப்பிரதேசத்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இரத்தத்தில் ஒரு தேசம்

(கல்முனை ஜெஸ்மி)

ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் குரல் எப்போதாவது எந்த வடி விலும் வெளிப்பட்டே ஆக வேண்டும். இந்த வகையில் சிறுபான்மை இனத்தின் தேசிய சர்வதேச பிரச்சினைகளின் வெளிப்பாடே விரைவில் அரங்கேறவுள்ள ரத்தத்தில் ஒரு தேசம் நாடகமாகும்.

முற்றிலும் நவீன தொழில் நுட்பத்துடன் உருவான இந் நாடகத்தின்கதை, வசனம், நெறியாள்கையினை இலங்கை வானொலி அறிவிப்பாளர் ஏ.முகமட் அன்சார் மேற்கொள்கின்றார். தென்கிழக்குப் பல்கலை ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜீன் மாத மளவில் கொழும்பு டவர் மண்டபத்தில் இந் நாடகம் அரங்கேறுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முகமட் அன்ஸார் தெரிவித்தார்.



நாட்டுப்பற்றாளர் நடேசன் அவர்களின் புகழுடல் வன்னிப் பெரு நிலப்பரப்புக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அங்கு அளிக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளைப் படத்தில் காணலாம்.

## இலக்கியச் சுடர்

மிதுனன்

## பயணம்

இன்னும் தான் தெரியும் அக்காட்சி
என் மனதில்
குத்துக்காலிட்டசையாது நிற்கும்
கொக்கும் நாரைகளும்
தூரத் தெரியும்.
கோரைப்புல் வெளியிடையே
ஓடும் வாகனத்தில்
இருக்கும் போதெல்லாம்
இன்னும் தான் தெரியும் அக்காட்சி
என் மனதில்
உதிர்ந்த காலங்களின் வழியே
கண்ணீரின் மீதே
கரைந்து போன என் பால்யமும்
சிறு மகிழ்வும்.
இந்தப் பெருவெளியிலும் கொஞ்சமாய்த்
தன்னை இழந்திருக்குமோ?
ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்தோடி
மேடும் பள்ளமுமாயான
பெருமணல் திட்டுகளில் புரண்டு
உடலெங்கும் மண் அப்பி
எழுந்துவர எண்ணிய
பயணங்களெல்லாம்
முடிந்துதான் போயிற்று.
இப்போதெல்லாம்
அசையும் வாகனத்தில்
அசையாப் பிண்டமென
ஓர் அமர்வும்
நகர்வது தெரியாமல் ஒருநகர்வும்
இல்லையென்று போனால் .....
உச்சிவெயிலுக்குத் தகித்து
தங்கப் புள்ளிகளாய்க் கொதிக்கும்
நீர்ப்பரப்பைப்
பார்க்கும் சில
சமயங்களில் மட்டும்
முற்றுப்பெறாத கவிதையொன்று
வந்துவந்து
நெருடிவிட்டுப் போகும்
வேறு என்ன?
எல்லாம்
முடிந்துதான் போயிற்று.
மூச்சிரைக்க மூச்சிரைக்
ஸ்டியரிங் கைத் திருப்புமென்
தந்தையின் தோளைத் தொட்டபடி
நின்று கொண்டு
நானே
பஸ்ஸை நகர்த்துவதாய்
எண்ணிக்களிப்புறும்
என் பயணமெல்லாம்
முடிந்துதான் போயிற்று
இனியென்ன?
இப்போதென் மகளும்
இன்னுமிரு வருடங்களின் பின்
மகனும்
யன்னல் கம்பிகளை பிடித்தபடி நின்று
அசையாதிருக்கும் கொக்கும் மரங்களும்
ஓடுவதாய்
காட்டிக் காட்டிக்களிப்புறுவதில்
என்னை இழக்க முனைவேன்
இருந்தும் இன்னும் தான் தெரியும்
அக்காட்சி
என் மனதில்



மூச்சிரைக்க மூச்சிரைக்க
ஸ்ரியரிங்கைத் திருப்புமென் தந்தையின்
ஒரு சின்னப்பிரார்த்தனை இறைவா
அப்புல் வெளியினூடு
எப்பொதெல்லாம் நான்
பயணிக்கின்றேனோ
அப்பொழுதெல்லாம்
ஒரு கொக்காவது நாரையாவது
மிஞ்சிப்போனால்
பஸ் சத்தத்திற்கு தலைநிமிர்த்தும்
ஒரு எருமையாவது
தோற்றம் தரட்டும்
அவ்வளவே!

*திருக்கோவில் கவியுவன*

# மட்டக்களப்பு மாநில நாட்டார் இலக்கியங்கள்

மட்டக்களப்பு மாநிலம், நாட்டார் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தளவில் மிகச் சிறப்பானதொரு இடத்தைப் பெறுகின்றது.

மட்டக்களப்பு பிரதேச ஆய்வுகளை மேற் கொள்வோருக்கு இங்கு காணப்படும் நாட்டார் இலக்கியங்களும், நாட்டார் கலைகளும், வாய்மொழிப் பாரம்பரிய விடயங்களும் பெரும் வரப்பிரசாதமாகவுள்ளன.

பேராசிரியர் க.சிவத்தம்பி அவர்கள் மட்டக்களப்பு பிரதேசம் சம்பந்தமாக பேச்சுவாக்கில், கூறும்போது "அள்ளஅள்ளக் கிடைக்கும் சுரங்கமாகப் இப்பிரதேசத்தைக் கூறுவார்.

ஆய்வாளருக்கு வேண்டிய பல நாட்டாரியல் விடயங்கள் இங்கு காணலாம் என்பது அவரது கருத்தாகும்.

நாட்டார் இலக்கியங்களுள் நாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல், ஒப்பாரிப்பாடல், ஊஞ்சற்பாடல், கப்பல்பாடல், கரவலைப்பாடல், வசந்தன்பாடல், கரகப்பாடல், குளுர்த்திப்பாடல், எண்ணெய்ச் சிந்துப்பாடல், கூத்துப்பாடல், கொம்புமுறிப்புப் பாடல், முஸ்லிம்களின் கவிகள், வாய்மொழிப்பாடல்கள், பாரம்பரியப் பாடல்கள் என்பனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இப்பாடல்கள் மூலம் மட்டக்களப்புப் பிரதேச மக்களுடைய வாழ்கை முறைகள், பழக்க வழக்கங்கள், மரபு முறைகள், சடங்குகள் பற்றியெல்லாம் சிறப்பாக அறிந்து கொள்ள முடிகின்றது.

கிராமியக் கலைகளிலே முஸ்லிம் மக்களுடைய வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், மரபு முறைகள், சடங்குகள் பற்றியெல்லாம் சிறப்பாக அறிந்து கொள்ள முடிகிறது.

கிராமியக் கலைகளிலே முஸ்லிம் மக்களுடைய பழக்க வழக்கங்களும், விவசாய முறைகளும் தெளிவாகக் கூறப்படுகின்றன.

மட்டக்களப்பு மாநிலத்தின் முக்கிய தொழில்களாக விவசாயம், மீன்பிடி இரண்டுமே இருப்பதன் காரணமாக நாட்டார் இலக்கியங்களும் இவற்றை மையமாக வைத்து எழுந்துள்ளன.

**"மாடும் வயசாளி**
**மாட்டுக் காரன் குமராளி**
**நாளுமொரு நோயாளி - மாடு**
**நடக்குதில்லை முதலாளி"**

என்னும் நாட்டுப்பாடலில் இருந்து அறிந்து கொள்ளலாம். இன்னுமொரு நாட்டுப்பாடலில்

**"ஒரு போக வேளாண்மைக்கு**
**உயர்வானைப் பார்ப்பது போல்"**

எனக் காணப்படுகிறது.

விவசாயத்தின் முக்கிய கூறுகளையும் வசந்தன் பாடல்கள் சித்தரிக்கின்றன.

1940ல் திரு.தி.சதாசிவஐயர் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ள அறுபத்தியிரெண்டு வகையான வசந்தன் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

வேளாண்மைச் செய்கை பற்றி விதைப்பு வசந்தன், அறுவடை வசந்தன், உப்பட்டி கட்டு வசந்தன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அக்காலப்பகுதியில் விதைக்கப்பட்ட நெல்லினங்கள் பற்றி இவ்வசந்தன் பாடல்களிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

"பச்சைப் பெருமான் கறுப்பன்
பாளை முகன் - செழும்
**பன்றிக் கூதன் வெள்ளை வாலன்**
**பச்சையப்பா**
**மெச்சியே பலரும் விரும்பும் வெள்ளை**
**வாலைன்**
**இந்த மேதினி எல்லாம் புகழும்**
**முத்துச்சம்மா"**

இவ்விதமே கொம்பு முறிப்பு விளையாட்டுடன் தொடர்பான பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள் யாவும் அமைந்துள்ளன.

நாட்டுப் பாடல்களுக்குள்ளே பெரும்பாலும் சமயம் சார்பான பாடல்கள், தொழில்சார் பாடல்கள், காதற் சுவை மிகு பாடல்கள் என்பன காணப்படுகின்றன.

நாட்டார் இலக்கியத்தில் முக்கிய இடம் பெறும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் தொடர்பான பாடல்கள் மேலும் சுவை நிரம்பியதாகவே உள்ளன. கிட்டிப்புள்ளு விளையாட்டுப்பாடல், தும்பி விளையாட்டுப் பாடல், கண்பொத்தி விளையாட்டுப்பாடல், தெப்ப விளையாட்டுப்பாடல், அம்மானைப் பாடல், எண்ணெய்ச் சிந்துப் பாடல், குளிர்த்திப் பாடல் யாவும் நாட்டாரிலக்கியப் பொக்கிஷங்கள்.

நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள் பற்றிப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் கூறும் போது "நாட்டுப் பாடல்களில் ஓசை இனிமையும், கருத்தழகும் மலிந்து கிடக்கின்றன" என்று கூறியுள்ளார்.

ஏழு விடயங்களை இப்பாடல்களில் அவதானிக்கலாம்.

1. நாட்டார் பாடல்களில் ஓசையும், இனிமையும் கலந்திருக்கும்.
2. கருத்தாழம் மிக்கதாய் இருக்கும்.
3. ஒரு விடயம் பல தடவை திரும்பத் திரும்பச் சொல்லப்படும்.
4. இன்னதென்று சொல்ல முடியாத ஓசை நயம் பொதிந்திருக்கும்.
5. பேச்சு வழக்கிலுள்ள சொற்களையும், சொல்லுருவங்களையும் கொண்டிருக்கும்.
6. நாட்டுப்பாடல்களுக்குத் தொடக்கமுமில்லை முடிவுமில்லை.
7. அந்தந்தக் காலச் செய்திகளையும், முறைகளையும் அவை ஏற்றுக் கொள்ளும்.

இப்பாடல்களில் எதுகை, மோனை என்பன தானாகவே வந்து அமைந்துவிடும்.

எடுத்துக்காட்டாக "ஈர்க்குப் போல் மூக்கல்லோ இளம்பிறை போல் நெற்றியல்லோ" என்னும் அடிகளைக் கூறலாம்.

நாட்டாரிலக்கியங்களைப் பெருமைப்படுத்துவன கூத்துப் பாடல்களேயாகும். அதுவும் மட்டக்களப்பு மாநிலத்தில் ஆடப்பட்டுவரும் வடமோடி தென்மோடிக் கூத்துப் பாடல்கள் மிகவும் சிறப்பு மிக்கவை. பல வகையான மெட்டுக்களில் இப்பாடல்கள் அமைந்திருக்கின்றன. தென்மோடிக் கூத்திலுள்ள தருக்கள் மேலும் சிறப்பைத் தருவன.

"தந்தன்னா தன தானன்னா தன தானான் தன தானன்னா....... என அமைந்து செல்லும்

இப்படி நாட்டார் இலக்கியங்களை நாம் படிக்கப்படிக்க மென்மேலும் படிக்கத் தூண்டுவனவாக அமைந்திருக்கும் இந்த இலக்கியங்கள் நமது சொத்து என்றால் அது மிகையான கூற்றாகாது.

**-செ.எதிர்மன்னசிங்கம்-**

### நகைச்சுவைத் துணுக்கு

*ஒருத்தி:-* என் கணவர் இரவு பதினொரு மணிவரை ஊர் சுற்றிவிட்டு வருகிறார்.



*அடுத்தவள்:-* பரவாயில்லையே! என் கணவர் இரவு பதினொரு மணிக்குத்தானே ஊர் சுற்றக் கிளம்புகிறார்.!

*-அமிர்தகழியான்-*

# இலக்கியச் செய்திகள்

## நூல் வெளியீடு

காத்தான்குடி பாத்திமா எழுதிய "பொய்த்தூக்கங்கள்" நூல் வெளியீட்டுவிழா இன்று (4.6.2004) மாலை 4மணிக்கு காத்தான் குடி மீரா பாலிகா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

காத்தான்குடிப் பிரதேசசெயலாளர் ஏ.எல்.எம் பஸீர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரம் தலைவர் என்.எம். அமீன் பிரதம அதிதியாகவும், இலங்கை வானொலி 'முஸ்லீம் சேவையைச் சேர்ந்த எம்.இஸட் அஹமத முனைவர், பவாஹினி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த எம்.என்.ராஜா எம்.சி.எம்.ஜாபிர், சக்தி எப். எம். வானொலியைச்சேர்ந்த எஸ்.ரி. ராவூப் தினக்குரல் செய்தியாளர் எம்.எ.எம்.நிலாம். ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். நவ இலக்கியமன்றம் இந் நூலை வெளியிடுகின்றது.

### நூல் அறிமுக விழா

டாக்டர் முருகானந்தம் எழுதிய ஐந்து நூல்களின் அறிமுக விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தர்மராம வீதியிலுள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தில் இடம்பெற்றது. டாக்டரின் டயரியிலிருந்து நீங்கள் நலமாக எடையைக்காத்து நலத்தைப் பேணுங்கள், நீரிழிவுடன் நலமாக வாழுங்கள். மறந்து போகாத சில,ஆகிய நூல்களே அறிமுகப்படுத்தப்பட்ட நூல்களாகும்.

### *நூல் வெளியீட்டுவிழா*

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு பருத்தியூர் பாலவைரவநாதனின் "வாழ்வியல் வசந்தங்கள்" என்னும் நூல் வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது. இவ்விழா கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா தலைமையில் நடைபெறுவதுடன், பிரதம விருந்தினராக வவுனியா மேல் நீதிமன்ற நீதியரசர் ஜே.விஸ்வநாதனும் சட்டத்தரணி ரஞ்சினி விஸ்வநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கே.மகானந்தன் கே. சண்முகலிங்கம், கே.பரமேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாசகர் கவனத்திற்கு,

இலக்கியச்சுடர் எனும் மகுடமிட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளிவரும் இப் பக்கத்திற்கு இலக்கியச் செய்திகள், எழுத்தாளர் அறிமுகம், பேட்டிக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. பழைய புதிய எழுத்தாளர். கவிஞர்கள் தங்களைப் பற்றிய இலக்கியத் தகவல்களுடன் புகைப்படபிரதியொன்றையும் சேர்த்து அனுப்பிவைக்கலாம்.

# நேபாளத்தின் பிரதமராக மீண்டும் பகதூர் தேவ் நியமனம்

(ராய்ட்டர்)

நேபாளத்தின் புதிய பிரதமராக ஷெர் பகதூர் தேவ் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நேபாளத்தின் பிரதமராக நியமிக்கப்பட்ட ஷெர் பகதூர் தேவ்வை நேபாள



மன்னர் கயனேந்திரா, மாவோயிஸ்டு தீவிரவாதிகள் பிரச்சினையைமையமாக வைத்து திடீர் பதவி நீக்கம் செய்தார். மேலும் மாவோயிஸ்டு தீவிரவாதிகள் உள்நாட்டுக் குழப்பத்தை விளைவிக்கப் போவதாக விடுத்த மிரட்டலைத் தொடர்ந்து கடந்த ஆண்டு 2002-க்கான பொதுத் தேர்தலை பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா ஒத்தி வைக்குமாறு மன்னர் கயனேந்திராவை கேட்டுக்கொண்டார்.

இதைத்தொடர்ந்து பிரதமரின் வேண்டுகோளை மன்னர் கயனேந்திரா நிராகரித்து விடவே, தனக்கு நிர்வாக உரிமைகளை வழங்கக் கூடிய அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா மன்னரிடம் கேட்டார். நேபாளத்தில் மன்னர்ஆட்சி முறை நடைபெற்று வருவதால், மன்னரின் ஒப்புதலை பெறாமல் எந்த அரசு நடவடிக்கைகளையும் ஒரு பிரதமர் எடுக்கமுடியாது. இதனால் மன்னர் கயனேந்திரா கடந்த 2002-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் திகதி பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பாவை பிரதமர் பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்தார்.

அதன் பிறகு சூர்யா பகதூர் தாபா என்பவர் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆனால் நேபாளத்தில் பெரும்பான்மை வகித்து வரும் 5 முக்கிய அரசியல் கட்சிகள் மன்னராட்சி முறையை ஒழித்து ஜனநாயக ஆட்சிக்கு வித்திடவேண்டும். என்று அடிக்கடி எதிர்ப்புத் தெரிவித்து குரல் கொடுத்து வந்ததால் கடந்த மே7-ம் தேதி சூர்யா பகதூர் தாபா தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

இதைத்தொடர்ந்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய பிரதமர் பதவிக்கான பெயரை முன்மொழியுமாறு மன்னர் கயனேந்திரா அரசியல் கட்சித்தலைவர்களை கூட்டி அவசர அவசரமாக ஆலோசனை நடத்தினார். அப்படிப் புதிதாக நியமிக்கக்கூடிய பிரதமர் ஒரு வருடத்துக்குள் பொதுத் தேர்தலையும் நடத்தக் கூடிய திறமைமிக்கவராக இருக்க வேண்டுமென்று மன்னர் கயனேந்திரா கேட்டுக்கொண்டார்.

இதனால் வெறுப்படைந்த 5 கட்சித் தலைவர்களும் அவரது வேண்டுகோளை நிராகரிப்புச் செய்தனர். இதையடுத்து நேற்று திடீரென மன்னர் கயனேந்திரா, ஷெர் பகதூர் தேவ்பாவை புதிய பிரதமராக மீண்டும் நியமனம் செய்வதாக அறிவித்தார். மேலும் அவருக்கு நிர்வாக உரிமைகளையும் வழங்கினார். கடந்த 26 நாட்கள் கழித்து இந்த அறிவிப்பு வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது 62 வயதாகும் ஷெர் பகதூர் தேவ்பா, நேபாள காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவர். 2 நாட்களுக்கு முன்பு இந்தியா வந்த அவர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கை புதுடெல்லியில் சந்தித்துப் பேசினார்.

ஷெர் பகதூர் தேவ்பா புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து நேபாள காங்கிரஸ் கட்சி கருத்துக்கூறுகையில் மன்னரின் கைப்பொம்மையாக இருந்த முன்னாள் பிரதமரைக்காட்டிலும் தேவ்பா அப்படியொன்றும் சிறந்தவரல்ல என்று தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

## ஈராக் புதிய அரசு அமெரிக்க கூட்டு படையுடன் உடன்படிக்கை செய்யும்

(ராய்ட்டர்)

அமெரிக்க கூட்டணிப்படைளுடன் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படும் என்று



ஈராக்கின் புதிய பிரதமர் இயாத் அலாவி தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் இடைக்கால பிரதமராக இருப்பவர் இயாத் அலாவி. இவர் அல்-அரப் அல்-யாவ்ம் என்ற தினசரிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் ஈராக் படைகள் முற்றிலுமாக தங்களது பணியை மீண்டும் ஏற்றுக்கொள்கிற வரை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினருடன் ஈராக் அரசாங்கம் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் என்று தெரிவித்துள்ளார். மேலும் அவர் இது குறித்து கூறியிருப்பதாவது:-

ஐ.நா.தலைமையிலான கூட்டணிப்படைகளுடன் விரைவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்படும். ஈராக் படைவீரர்கள் மீண்டும் தங்கள் பொறுப்புக்களை ஏற்கிற வரை அமெரிக்காவுடனான இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஈராக்கில் பாதுகாப்பு பணியை நிர்வாகிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பிரபஞ்ச அழகியாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெனிபர் ஹாகின்ஸ் தேர்வு

(ராய்ட்டர்)

பிரபஞ்ச அழகியாக ஆஸ்த்திரேலியாவைச் சேர்ந்த ஜெனிபர் ஹாகின்ஸ் தேர்வு செய்யப்பட்டார். தென்னாப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவடார் நாட்டில் உள்ள



குவிட்டோ நகரில் 2004-ம் ஆண்டுக்கான ''மிஸ் யுனிவர்ஸ்'' அழகிப் போட்டி நேற்று முன் தினம் இரவு நடந்தது.

கிட்டத்தட்ட 7,500 பார்வையாளர்கள் கூடியிருந்த மாபெரும் அரங்கில் நடைபெற்ற இந்த 2 மணிநேர அழகிப்போட்டியில் 80 நாடுகளைச் சேர்ந்த பல்வேறு அழகிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அழகு, அறிவு, அதிஷ்டம் என்ற 3 கற்றுக்களைக் கொண்ட இந்த அழகிப்போட்டியில் ஆஸ்த்திரேலியாவைச் சேர்ந்த ஜெனிபர் ஹாகின்ஸ் உலகின் மிகச் சிறந்த பிரபஞ்ச அழகியாக இறுதியில் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

அவருக்கு முன்னாள் பிரபஞ்ச அழகி அமீலியா வேகா கிரீடம் சூட்டி கௌரவித்தார். 'பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெனிபர் ஹாகின்ஸ் ஏற்கெனவே மிஸ் ஆத்திரேலியா அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். 20 வயது நிரம்பிய ஜெனிபர் ஹாகின்ஸ் 5 அடி 11 அங்குலம் உயரமுடையவர். ஜெனிபர் ஹாகின்ஸ் பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டதும் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான பார்வையாளர்களின் கரவொலியுடன் தனது மகிழ்ச்சியை கையசைத்து தெரிவித்துக் கொண்டார்.

## எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க போவதாக சவூதி அரேபியா அறிவிப்பு

(ராய்ட்டர்)

சவூதி அரேபியாவில் எண்ணெய் உற்பத்தியை இந்த ஆண்டு அதிகரிக்கப்போவதாக சவூதி அரேபிய எண்ணெய் வளத்துறை அமைச்சர் அலி அல்-நூவாமி தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் பெட்ரோல், டீசல் முதலான கச்சாப்பொருள்களின் விலை அதிகளவில் உயர்ந்துவிட்டது. இந்நிலையில் இந்த கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க சவூதி அரேபியா தற்போது தயாராக இருப்பதாக அந்நாட்டு எண்ணெய் வளத்துறை அமைச்சர் அலி அல்-நுவாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது.

கடந்த 1997 மற்றும் 1998-ம் ஆண்டுகளில் உலகப்பொருளாதார சீர்கேட்டின் காரணமாக எண்ணெய் உற்பத்தியின் விலை ஒருபீப்பாய்க்கு 10 டொலருக்கும் கீழாக குறைந்தது இக்குளறுபடியை தவிக்க முடியாமல் சவூதி அரேபியா ஒருநாளைக்கு 2 மில்லியன் பீப்பாய் கொள்ளளவிலேயே கச்சா எண்ணெய்களை உற்பத்தி செய்து வந்தது. இந்நிலையை தவிர்க்கவும். கச்சா எண்ணெய்களின் அதிக விலையேற்றத்தை சரிக்கட்டவும், சவூதி அரேபியா தற்போது அதிகளவில் எண்ணெய் உற்பத்தியை தயாரிக்க முடிவு செய்துள்ளது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பிரதமர் மன்மோகன்சிங், வாஜ்பாய், சோனியா அத்வானி உட்பட புதிய எம்.பி.க்கள் பதவியேற்றனர்

(ராய்ட்டர்)

14 வது பாராளுமன்றம் நேற்று முன்தினம் பலத்த பாதுகாப்புடன் கூடியது. பிரதமர் மன்மோ



கன்சிங், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் துணைப்பிரதமர் அத்வானி, காங்கிரஸ் தலைவர் சோனியா உட்பட புதிய எம்.பி.க்கள் பலரும் நேற்று எம்.பி.யாக பதவி ஏற்றுக்கொண்டனர்.

13வது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 14வது பாராளுமன்றத்துக்கு கடந்த ஏப்ரல் 22, 26, மே 5, 10 ஆகிய திகதிகளில் 5கட்டங்களாக தேர்தல் நடை பெற்றது. இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் ஓரளவு அதிக இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி இடதுசாரி கட்சிகளின் தயவால் சில எதிரிக்கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு, மத்தியில் புதிய அரசை அமைத்தது. இத்தாலி நாட்டில் பிறந்த வெளிநாட்டவரான சோனியா காந்தி பிரதமர் பதவியை ஏற்க கடும் எதிர்ப்புக் கிளம்பியதால் அவர் பிரதமர் பதவியை ஏற்க மறுத்து விட்டார்.

இதனையடுத்து மூத்தகாங்கிரஸ் தலைவரான மன்மோகன் சிங் பிரதமர் பதவியை ஏற்றார். இவரது அமைச்சரவையில் தி.மு.க.வினரும் இடம்பெற்றுள்ளனர்.தாங்கள் கேட்ட இலாகாவை கொடுக்காதவரை தாங்கள் பொறுப்பு ஏற்கமாட்டோம் என்று மிரட்டி பிறகு தாங்கள் கேட்ட இலாகாவை பெற்று தி.மு.க. மந்திரிகள் பொறுப்பு ஏற்றனர்.

மன்மோகன்சிங்கிற்கு பிரதமர் பதவி கொடுக்கப்பட்டதால் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி பாராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் குழுத் தலைவராக தேர்ந்தேடுக்கப்பட்டார். இதேபோல் பாரதிய ஜனதாவிலும் முன்னாள் துணைப்பிரதமர் எதிர்கட்சித்தலைவராகவும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பாராளுமன்ற பாரதிய ஜனதா குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 14 வது பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் நேற்று காலை 11 மணிக்கு தொடங்கியது. பாரா



ளுமன்றம் கூடுவதற்கு முன்பாக இடது கம்யூனிஸ்ட் தலைவர் சோமநாத் சட்டர்ஜி தற்காலிக சபாநாயகராக பொறுப்பு ஏற்றுக்கொண்டார். .அவருக்கு ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல்கலாம் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.அதன் பிறகு பாராளுமன்றம் கூடியதும் தற்காலிக சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி புதிய உறுப்பினர்களை வரவேற்றுப்பேசினார். பாராளுமன்றத்தை



சிறப் புடன் நடத்துவதற்கு உறுப்பினர் கள் ஒத்துழைக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## புத்தகயாவுக்கு தாய்லாந்து துணைப் பிரதமர் வருகை

(ராய்டர்)

இந்தியாவில் உள்ள புத்தகயாவுக்கு தாய்லாந்து துணைப் பிரதமர் சாட்டுரான் சாய்சாங் தலைமையில் 120 பேர் அடங்கிய குழு ஒன்று நேற்றுக் காலை வந்தது. புத்தகயாவில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் வடபார்த்தக் கோயில் ஒன்றின் அடிக்கல் நாட்டு விழாவுக்காக இந்த 120 பேர் அடங்கிய குழுவினர் நேற்று வந்தனர். அவர்களது வருகையைத் தொடர்ந்து தாய்லாந்து துணைப் பிரதமர் கயாவுக்குச் சென்றார்

வட்பா கோயிலுக்கான அடிக்கல் நாட்டு விழாவை துவக்கி வைத்ததார். அதன் பிறகு விருந்தினர் மாளிகை ஒன்று அமைப்பதற்காக கட்டுமானப் பணியையும் அவர் துவக்கி வைத்தார். பாங்கொக்கிலிருந்து சிறப்பு போயிங் விமானத்தில் வந்த இந்த 120 பேர் அடங்கிய குழுவினரைகயாவின் மாவட்ட மாஜிஸ்திரேட்டும், புத்த கோயில் நிர்வாக குழுவின் தலைவருமான ஆசிஷ் சந்திரா விமான நிலையத்தில் வெகு விமரிசையாக வரவேற்றார். இத்தகவலை அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிமுபா அணி வெற்றியீட்டியது

அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி கிரிக்கெட் அணிக்கும். அட்டாளைச்சேனை நியூ ஸ்ரார் அணிக்கும் இடையே கடந்த வாரம் கல்விக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற 15 ஓவர் கிரிக்கெட் போட்டியில் கல்விக்கல்லூரி அணி 69 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. கல்விக் கல்லூரி அணியைச் சேர்ந்த அஸ்பகான்,எம்.நசீம் ஆகியோர் முறையே 25,30 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். நியூ ஸ்ரார் கழகத்தைச் சேர்ந்த முபீர் 3 விக்கெட்டுக்களை பந்து வீசி பெற்றுக்கொண்டார்.

இதே வேளை அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரி இல்லங்களுக்கு இடையே இடம் பெற்ற 15 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கமரி இல்லம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. கமரி இல்லம் முதலாவது போட்டியில் நஜ்மி இல்லத்தை எட்டு விக்கெட்டுக்களாக வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியில் பஜ்ரி இல்லத்தை 6 விக்கட்டுக்களால் தோற்கடித்த கமரி இல்லம் சம்பியனானது. இப்போட்டிக்கு மத்தியஸ்த்தர்களாக ஐ.எல் .எம்.பாயிஸ், எம்.எச்.எம்.ஹம்மாத் ஆகியோர் கடமையாற்றினர். இப்போட்டிகளில் அஸ்பகான், நசீர் ஆகியோர் பந்து வீச்சிலும், துடுப்பாட்டத்திலும் சிறந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இறுதிப்போட்டியில் அஸ்பகான் 5 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுக்களையும், றமீஸ் 5 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இச் சுற்றுப்போட்டியில் பிரதம அதிதியாக பீடாதிபதி ஏ.எல்.ஏ.றசூல், கலந்து சிறப்பித்தார். உபபீடாதிபதிகளான எம்.ஏ.எம்.ஜெமீல் ,யூ.எல்.எம் புகாரி. உடற்கல்வி விரிவுரையாளர் எம்.ஐ. எம்.முஸ்தபா, எம்.ஐ.எம்.அமீர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தார்கள்




# இந்திய வீரர் அபிஜித்காலேவிற்கு ஏழுமாத காலத்தடை உத்தரவு

இந்திய அணியில் இடம் பெற்ற லஞ்சம் கொடுக்க முன்வந்ததாக புகார் கூறப்பட்ட மகாராஷ்டிராவைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் அபிஜித் காலேவிற்கு 7 மாத காலத் தடை (வரும் டிசம்பர் மாதம் வரை) விதிக் கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பிடிப்பதற்காக தேர்வுக் குழுவைச் சேர்ந்த கிரண் மோரே,பிரணாப் இருவரும் தலா 10 லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்க முன் வந்ததாக மகாராஷ் டிராவைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் அபி ஜித் காலே மீது குற்றம் சாட்ட ப்பட்டது. இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு தலைவர் ஜக் மோகன் டால்மியா தலைமை யிலால 3 பேர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கை குழு விசாரணை நடா த்தியது. இந்தக் குழுவின் கூட்டம் கொல்கத்தாவில் நடைபெற்றது. இதில் அபி ஜித் காலேவிற்கு 7மாத கால தடை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதாவது வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரை காலே எந்தப் போட்டிக ளிலும் கலந்து கொள்ளக் கூடாது என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை 3பேர் கொண்ட குழு நேற்று ஒரு மனதாக அறிவித்தது. தேர்வுக்குழுவுக்கு லஞ்சம் கொடுக்க முன்வந்ததாக அபிஜித் காலே மீது பெரிய குற்றச் சாட்டு கூறப்பட்டு இருந்தாலும், காலே மீதான குற்றச் சாட்டிற்கு நேரடி ஆதாரம் ஏதும் இல்லாததால் அவருக்கு கடுமையான தண்டனை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக டால்மியா தெரிவித்துள்ளார். ஆனால் நேரடி ஆதாரம் இல்லாவிட்டாலும், தேர்வுக்குழு வினர் மீது தனது செல்வாக்கை அபிஜித்காலே பயன்படுத்த முயன்ற தால் ஒழுங்கு நடவடிக்கையின் கீழ் அவர் குற்றமுடையவராக கருதப்பட்டுள்ளார் என்றும் டால்மியா தெரிவித்துள்ளார். மேலும் காலேவின் எதிர் கால கிரிக்கெட் வாழ்வை கருத்தில் கொண்டும்,நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டாலும் அவருக்கு வரும் டிசம்பர் 31ம் திகதி வரை மட்டும் தடை விதிக்கப் பட்டுள்ளதாகவும் டால்மியா தெரிவித்துள்ளார்.

# யுனெஸ்கோ வலைப்பந்தாட்டப் போட்டியில் பாலமுனை மின்உறாஜ் சம்பியன்

கடந்த 16ம்திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டாளைச் சேனை அரபா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற யுனெஸ்கோ வலைப்பந்தாட்டப்போட்டியில் பாலமுனை மின் உறாஜ்மகாவித்தியாலய அணியினர் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். அட்டாளைச்சேனை அல்முனிரா மகளிர் கல்லூரி, அறபா வித்தியா லயம், அந்நூர் மகாவித்தியாலயம், பாலமுனையின் மின் உறாஜ் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் வலைப்பந்தாட்டக் குழுக்கள் இப்போட்டியில் பங்கு பற்றின.

இச்சுற்றுப்போட்டியில் முதலாமிடத்தை பாலமுனை மின் உறாஜ் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயமும், 3ம் இடத்தை அல்முனிரா மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

முதலாவது போட்டியில் அந்நூர் வித்தியாலயம் அறபா மகாவித்தியாலத்தை 4-0 புள்ளிகளாலும், 2வது போட்டியில் மின் உறாஜ் அல்முனிறாவை 11-1 புள்ளிகளாலும், வெற்றி யீட்டின. 3ம் சுற்றுக்கான போட்டியில் அல்முனிரா அறபாவை 12-0புள்ளிகளால் தோற்கடித்து வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் மின் உறாஜ், அந்நூர்மகா வித்தியாலயத்தை 12-0 புள்ளிகளால் தோற்கடித்தது.

அல்முனரா அதிபர் கே.எம்.சுபைர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அதிபர் எம்.எம். சுபைர், அதிபர் எம்.எச்'.கஸ்ஸாலி, அதிபர் எம்.கே.எம். இபுறாக் போட்டி இணைப்பாளர் கே.சி.எம்.அஸ்ஹறர், விளையாட்டுத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா உட்படபலரும் கலந்து சிறப்பித்தனர். சகல போட்டிகளுக்கும் செல்வி பி.சகுநந்தி, எம்.ஐ.சிமலைன் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்.

இப்போட்டியில் பங்குபற்றிய சகல பாடசாலைகளு க்கும் யுனெஸ்கோ அமைப்பு பணப் பரிசில்களை வழங்கவிருப்பது குறிப்பிடத்தப்பது.

# மே.இந்திய தீவுகள்-வங்கதேச டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது

மே.இ.தீவுகள்,வங்கதேச அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இரு அணிகளுக்கும் இடையேயான 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் சிறப்பாக விளையாடிய வங்கதேச அணி 2வது இன்னிங்சின் தொடக்கத்தில் தடுமாறினாலும் காலித் மசூத்தின் அபார சத உதவியால் 2வது இன்னிங்சிலும் வங்கதேச அணி நல்ல நிலையை எட்டி போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்தது.

இதனால் 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்த தொடர் 0-0 என்ற நிலையிலுள்ளது.

முதல் இன்னிங்சில் வங்கதேச அணி 416 ஓட்டங்களை எடுக்க, இதனை தொடர்ந்து விளையாடிய மே.இ.தீவுகள் முதல் இன்னிங்சில் 352 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்து 2வது இன்னிங்சை விளையாடிய வங்கதேசம் 9 விக்கட்டுக்களுக்கு 271 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது. இதனையடுத்து விளையாடிய மே.இ.தீவுகள் 2வது இன்னிங்சில் விக்கட் இழப்பின்றி 113 ஓட்டங்களை எடுத்து இருந்தபோது கடைசி நாள் ஆட்டம் முடிய போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முதல் இன்னிங்சில் சதமும் இரண்டாவது இன்னிங்சில் அரைச் சதமும் அடித்த கிரிஸ் கெய்ல் ஆட்ட நாயகனாக தேர்வு பெற்றார்

டெஸ்ட் அந்தஸ்த்து பெற்ற பின்பு வங்கதேச அணி வெற்றி தோல்வியின்றிச் செய்யும் 3வது டெஸ்ட் போட்டி இதுவாகும்

இதுவரை 29டெஸ்ட் போட்டிகளில் வங்கதேசம் விளையாடி உள்ளது. இதற்கு முன்பு வங்க தேச அணி வெற்றி தோல்வியின்றி முடித்துள்ள 2 போட்டிகளும் மழையால் வெற்றி தோல்வியின்றி முடிந்த போட்டியாகும் வங்க தேசம் மே.இ. தீவுகள் அணிகளுக்கு இடையேயான 2வது டெஸ்ட் வரும் வெள்ளிக் கிழமை கிங்ஸ்டனில் தொடங்க உள்ளது.

முதல் இன்னிங்சில் 64 ஓட்டங்கள் முன்னிலை பெற்றதோடு 2வது இன்னிங்சை வங்கதேச அணி தொடக்கியது.

4ம் நாள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 94 ஓட்டங்கள் என்ற மோசமான நிலையில் வங்கதேசம் இருந்தது. முதல் இன்னிங்சில் சிறப்பாக விளையாடியும் 2வது இன்னிங்சில் மோசமாக விளையாடியதால் தோல்வி பெறும் நிலைக்கு தள்ளப்பட்டது வங்கதேசம்.

ஆனால் காலித் மசூத் 103 ஓட்டங்களை எடுத்ததன் உதவியுடன் நல்ல நிலைக்கு வங்க தேசம் முன்னேறியது.

ஏறக்குறைய 5 1/2 மணி நேரம் களத்தில் நின்று விளையாடிய மசூத் 281 பந்துகளைச் சந்தித்து 13பவுண்டரிகளை அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.5ம் நாள் ஆட்டத்தின்போது 279/0 என்ற நிலையில் இருந்தபோது 2வது இன்னிங்சை வங்கதேசம் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதனால் மே.இ.தீவுகளுக்கு 335 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய மே.இ.தீவுகள் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்களை எடுத்தது இருந்தபோது 5ம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. கெய்ஸ் 66 ஓட்டங்களும் ஸ்மித் 40 ஓட்டங்களுடனும் இருந்தனர் இதனால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

## நீர் வடிகாலமைப்பு சபையின் கவனத்திற்கு

(கல்முனை ஜெஸ்மி)

கல்முனைப் பிரதேசத்தில் தேசிய வடிகாலமைப்புச் சபையின் கீழு ள்ள குடி நீருக்கான அலகுக் கணக்கெடுப்பானது முப்பது நாட்களுக்கொருமுறை இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் கடந்த இரு மாதங்களாக 45 நாட்களுக்கு ஒரு முறை கணக்கெடுப்புச் செய்யப்படுகின்றது. இதனால் அலகொன்றிற்கு ரூபா 45 மேலதிகமாக அறவிடப்ப டுகின்றது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் அறவிடலால் இப்பிரதேச மக்கள் பெரும் சுமைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.எனவே ஒவ்வொரு மாதமும் இப்பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை பிரதேச நீர்ப்பாவனையாளர்கள் வடிகாலமைப்புச் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சம்மந்தப்பட்டவர்கள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## மயிலவட்டவான் கிராம மக்களுக்கு வழி திறக்குமா?


கடந்த வன்செயல் காலங்களுக்கு முன் சகல வளங்களுடனும் விளங்கிய மிகப்பழைமையான மயிலவட்டவான் கிராமம் கோர யுத்தத்தினால் அழிவுற்று அங்கு வாழ்ந்த மக்களும் அக்கிராமத்தை விட்டு வெளியேறி இது வரை காலமும் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளை அண்டியுமே வாழ்ந்து வந்தனர். தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் மீள் குடியேற்றத் திட்டங்களுக்கமைய அக் கிராம மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள போதிலும் தங்களது வழமையான வாழ்க்கையினை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

கடந்த காலங்களில் அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் போன்றன மீள் குடியேற்றத்தினை ஊக்குவிக்கும் வகையில் தங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதோடு, தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கக் கூடிய வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தருவதாக உறுதியளித்த போதிலும் அந்த உதவிகள் இன்று வரை கிடைக்காத நிலையில் பெரும் அவதியுறுகின்றனர்.

இவ்வாறு தாங்கள் நிலையாக வாழ்வதற்குரிய வீட்டு வசதிகளோ, குடிநீர், மல சல கூட வசதிகளோ இன்று வரைக்கும் கிடைக்கவில்லை

எனவே இந்த யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி அனைத்து வழங்களையும் இழந்த மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியது போன்று அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் அடிப்படை வசதியுடன் கூடிய வசதிகளை செய்து தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்

- கே.ஜே.கே -




## களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சுகாதாரச் சீர்கேடு

களுவாஞ்சிகுடி மாவட்ட வைத்தியசாலையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மருந்து விநியோகப் பிரிவிற்கு அருகாமையிலுள்ள மலசல கூடம் ஒழுங்காகச் சுத்தம் செய்யப்படாத காரணத்தினால் துர்நாற்றம் வீசுகிறது, வைத்திய அதிகாரியின் இளைப்பாறும் அறை பாவிக்க முடியாத நிலையில் உள்ளது ஈ.சி.ஜி அறையின் கதவுகள் கறையான் பிடித்த நிலையில் இன்னும் திருத்தப்படவில்லை உடைந்து விழுந்த நோயாளர் தங்குமடம் திருத்தப்படவில்லை கர்ப்பிணித் தாய்மார்கள் பாவிக்கும் மலசல கூடமும் பாவிக்க முடியாதுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

எஸ். ரவீந்திரன்

## வீதி புனரமைக்கப்படுமா?

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கன்னன்குடா கிராமம் ஊடாக கரையாக்கன்தீவு வரையான பாதைகள் பல நீண்ட காலமாக குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றன.

இதனால் பயணிகள் நாளாந்தம் பல அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். இவ்வீதிகளில் ஏற்கனவே தார் ஊற்றி செப்பனிடப்பட்டும் கூட அவை தற்போது ''பழைய குருடி கதவைத்திறடி" என்ற வாக்கியத்திற்கேற்ப மாறி விட்டது. அத்துடன் வீதிகள் அகலமாக்கப்படாமல் ஒடுங்கிய நிலையில் காணப்படுகின்றது. இதனால் கனரக வாகனங்கள் பல இடர்களுக்கு மத்தியில் போக்குவரத்தினை மேற்கொள்கின்றன.

அத்துடன் வீதி ஓரங்களிலுள்ள வீட்டுச்சொந்தக்காரர்கள் வீதியை தமது வீட்டுக்காணியுடன் சேர்த்து வேலி அடைத்திருக்கிறார்கள் இதை யாரும் கவனிப்பார் இல்லை எனவே உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இவ்வீதியை அகலமாக்கி புனரமைத்து மக்களின் போக்கு வரத்திற்கு எதுவித இடைஞ்சலுமின்றி வழி வகை செய்யுமாறு கேட்டு நிற்கின்றேன்.

உ.பிரவினன்
கரையாக்கந்தீவு



## சிந்தனைக்கு

தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி முழு உலகமும் நன்கறியும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

ஈழநாதம்
மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303
batti@eezhanatham.com
04.06.2004

# சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுக்களை ஏற்படுத்த வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் கொண்டுள்ள அக்கறை போன்று கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வரும்கொடூரப் படுகொலைகளை நிறுத்த சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் கரிசனை கொண்டிருக்கிறது.

ஒரு நிரந்தர சமாதானத்துக்கான அத்திவாரமிடலாக தமிழீழவிடுதலைப்புலிகள் கோரியிருக்கின்ற இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நிறுவப்பட வேண்டும். அதனூடாக தமிழர் தாயகத்தின் புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது விடுதலைப்புலிகளதும் தமிழ் மக்களதும் அவாவாகும்.

இது தொடர்பான தெளிவுறுத்தல்கள் சர்வதேச சமூகத்திடம் ஏற்கனவே உணர்த்தப்பட்டுள்ளது.

இதனை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ள போதும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான விடயத்தில் இழுத்தடிப்புக்கள் ஒரு புறமிருக்க கிழக்கு மாகாணத்தில் சமீப காலமாக இடம்பெற்று வரும் படுகொலைகள் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதில் தளர்வு நிலையை ஏற்படுத்தியுள்ளது. உறுதியான சமாதானத்திற்கான அத்திவாரமிடல்கள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே கொடை வழங்கும் நாடுகளின் உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கும். இல்லாவிட்டால் மனிதாபிமான உதவி தவிர்ந்த எந்த உதவியையும் இலங்கைக்கு வழங்கப் போவதில்லை. என சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் கூறியுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா படையினர் எல்லைக்குள் நடைபெற்று வரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகத் தமிழ் மக்கள் மிகுந்த கவலையும் வேதனையுமடைந்திருக்கின்றனர். நாளை யார் மீது கொலையாளிகள் குறிவைக்கப் போகின்றார்கள் என்ற நிம்மதியற்ற தன்மையை ஏற்படுத்தியிருக்கும் கொலை கலாசார சூழலிலிருந்து விடுவிப்பதற்கான ஒரு கால கட்டத்தை ஏற்படுத்த முடியுமாயின் சமாதானம் என்ற நம்பிக்கை உருவாகும்.

இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தோன்றியிருக்கும் படுகொலை கலாசாரத்தின் சூத்திரதாரிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த படைத்தரப்பு பின்னடிக்கக்கூடாது இதற்கான அழுத்தம் சர்வதேச ரீதியாக சிறிலங்கா அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

சர்வதேச நிதி உதவி வழங்குவதாயின் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டுமென சர்வதேச சமூகம் விடுத்திருக்கும் வலியுறுத்தல் போன்று படுகொலை கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு சர்வதேச சமூகம் தமது அழுத்தத்தைக் சிறிலங்கா கொடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்கள் எதிர்பார்ப்பாகும்.

கிழக்கு மண் படுகொலைக் களங்களை சுமந்த மண், இரத்தம் ஆறாய் பாய்ந்தோடிய மண், வீதிகளில் தமிழ் உறவுகளின் உடல்கள், சிதறிக்கிடந்த அகோரக் காட்சிகள் மலிந்த மண், பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா படைத்தரப்பால் உயிருடன் எரிக்கப்பட்ட அவலத்தைக் கண்டு அழுத மண்.

இத்தகைய மண்ணில் புத்திஜீவிகள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் என குறிவைக்கப்பட்டு களமாடுவது தவிர்க்கப்பட வேண்டும். இனியாவது சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# இடைக்காலத்தின் நிகழ்காலம்

நேற்றையத் தொடர்ச்சி...

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தோன்ற வேண்டிய நிலைக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்களில் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் முக்கியமானவர் என்ற கருத்தையும் நாம் இங்கே வலியுறுத்த விரும்புகிறோம். அரச பயங்கரவாதப் போர்கள் காரணமாகவும், அரசு விதித்த உணவு-மருந்து-பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் தான், எம்மக்களின் இயல்பு வாழ்க்கை அவலம் நிறைந்த வாழ்வாக மாறியது. ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில்தான், தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவம் கடுமையான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, உயிரிழப்பையும், சொத்து இழப்பையும், பொருள் இழப்பையும் ஏற்படுத்தியது. ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் ஓர் இரவிலேயே அகதிகளாக இடம்பெயர்ந்த வரலாற்றுக் கொடுமையும், சந்திரிகா அம்மையாரின் அதிகாரத்தின் கீழேயே நடைபெற்றது. ஆகவே அவர் மூலமாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை மாற்றியமைக்க வேண்டிய தார்மீக கடமையும், நேர்மையும் அம்மையாருக்கு இருக்க வேண்டும். ஆனால் இவற்றை அலட்சியம் செய்யாது தன்னுடைய சொந்த அரசியல் நலனில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளவராக, சந்திரிகா அம்மையார் செயல்படுகிறார்.

அறுதிப் பெரும்பான்மை அற்ற அரசுக்குத் தலைமை வகித்துக் கொண்டிருக்கின்ற சந்திரிகா அம்மையாருக்கு தன்னுடைய ஆளும் கட்சிக் கூட்டணியை சேர்ந்த ஒருவரை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கக் கூடிய வல்லமை கூட இன்று இல்லை. இந்த இலட்சணத்தில் இடைக்காலத் தன்னாட்சி குறித்தும், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குரிய இறுதித் தேர்வு குறித்தும் ஒரே நேரத்தில் பேசித் தீர்க்கப் போவதாக சந்திரிகா அம்மையார் கூறி வருவதானது, வியப்பை மட்டுமல்ல, ஆத்திரத்தையும் உருவாக்குகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விடயத்தையும் நாம் சுட்டிக் காட்ட விழைகின்றோம். 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' என்பது அதன் பெயருக்கு ஏற்றால் போல், இடைக்காலத்திற்கு உரியதே தவிர நிரந்தரமான அதிகாரம் உள்ள நிர்வாகக் கட்டமைப்பு அல்ல, என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தவிரவும் இந்த ஆலோசனை வரைவு, சமாதானத் தீர்வுக்கு உரிய ஆலோசனை வரைவு அல்ல, என்ற யதார்த்தத்தையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். தமிழ்த் தேசத்தின் தேசியப் பிரச்சினைக்குரிய நிரந்தரமான-நியாயமான-கௌரவமான சமாதானத் தீர்வினை- ஓர் இறுதித் தீர்வினை- அடைவதற்கும், அதனை அமுல்படுத்துவதற்கும் நீண்ட காலமெடுக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் இன்னல் நிறைந்த வாழ்க்கை இன்னமும் இயல்பு நிலைக்குத் திரும்பாமல் இருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சரியாக சொல்லப் போனால், இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் குரிய ஆலோசனைகளை ஏற்று, மிக விரைவில் இந்த அதிகார சபையை முறையாக உருவாக்கி, அதனைச் செயற்பட வைப்பதன் மூலம் தான் இறுதித் தீர்வுக்குரிய அத்திவாரம் பலமாக போடப்படும் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை முறையாகத் தீர்க்கக் கூடிய எந்தத் தீர்வும், ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பிற்கு முரண்பட்டதாகவே இருக்கும் - என்ற யதார்த்தத்தை நாம் எல்லோரும் அறிவோம். இந்தத் தடையை தாண்டுகின்ற காலம் வரும் வரை, தமிழ் மக்களின் வாழ்க்கை தொடர்ந்தும் இன்னல் நிறைந்ததாகவே இருக்கக் கூடாது

**சபேசன்**

என்பதற்காகவும் தான், இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஆலோசனைத் திட்ட வரைவு உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட அதிகார சபைக்குரிய ஆலோசனைத் திட்டமும், இந்த அரசியல் யாப்புச் சிக்கலுக்குள் மாட்டித் தவிக்குமேயானால், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குரிய இறுதித்தீர்வு, பேச்சு வார்த்தைகள்



மூலம் பெறப்படலாம் என்ற நம்பிக்கையும் விரைவில் பொய்த்து விடும். இன்று தமிழீழ மக்கள் பொதுத் தேர்தல் ஊடாக, ஏகமனதாக வழங்கிய இறையாணைகளில், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் குரிய, ஆணையும் ஒன்றாகும். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய ஆலோசனைகள், உடனடியாக பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, முறையான அதிகாரசபை உருவாக்கப் பட வேண்டும் - என்றே தமிழீழ மக்கள் தெளிவான தீர்க்கமான ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட, ஜனநாயக ரீதியாக ஏகமனதாகக் கொடுக்கப்பட்ட ஆணையையும், சந்திரிகா அம்மையாரின் ஸ்ரீலங்கா அரசு புறக்கணிக்குமேயானால், இச்சமாதானப் பேச்சு வார்த்தைகளினால், உருப்படியான பலன் எதுவும் வரப்போவதில்லை என்பதே உண்மையாகும்.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை இவ்வாறு இழுபட்டுக் கொண்டு போவதுதான், நிகழ்காலச் சம்பவங்களாக இருக்கப் போகின்றது என்றால், இடைக்காலத்தையும், நிகழ்காலத்தையும் பற்றி யோசிப்பதை விட்டு, நிலையான எதிர்காலம் குறித்து தமிழீழம் முடிவொன்றை எடுக்கும் காலம் நெருங்கி வந்து விடும் என்பதை, சந்திரிகா அம்மையார் உணர்ந்திட வேண்டும்.

# எந்த பேரினவாத சக்திகளும் தமிழினத்தின் சுதந்திரத்தை இலகுவில் தந்துவிட மாட்டார்கள்

## -துணை அரசியல் பொறுப்பாளர் தங்கன் உரை-

(மயூரன்)

எந்தவொரு சிங்களப் பேரினவாத சக்திகளும் இந்த தமிழ் இனத்தினுடைய சுதந்திரத்திற்கான தீர்வினை இலகுவில் தந்தவிட முடியாதவர்களாக இருக்கின்றார்கள். கடந்த கால 20 வருடங்களுக்கு மேலான இந்தப் பெரும் போர் எங்களுக்குப் பல சமாதானப் பேச்சுவார்த்தைகளையும், பல யுத்த நிறுத்தங்களையும் எங்களுக்குக் காட்டி இருக்கின்றது.

இவ்வாறு வவுனியா புளியங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வில் கலந்து உரைநிகழ்த்திய அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது

கடந்த காலம் ஆட்சியிலே இருந்த ஒவ்வொரு அரசாங்கங்களும் தமிழீழத்தை ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு தமது செயற்பாடுகளை நகர்த்தியது அன்றைய காலப் பகுதியில்.

இன்று நாம் பலம் மிக்க சமூகமாக எந்த நடவடிக்கைகளுக்கும், எந்த சவால்களுக்கும் முகங்கொடுக்கக்கூடிய ஒரு சக்தியாக எங்களுடைய தேசியத் தலைவர் அவர்கள் இருக்கின்றார். இந்த காலப்பகுதியில் நாங்கள் யுத்தமாக இருந்தாலும் சரி சமாதானமாக இருந்தாலும் சரி எதர்க்கும் முகம் கொடுக்க எங்களுடைய தலைவர் அவர்கள் தயாராக இருந்த போது தான் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்று நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அன்று சிறிலங்கா பேரினவாத அரசு பல சர்வதேச சாதனங்களின் உதவியோடு தொடுத்த போர் வடுக்கள் இந்த தேசத்தில் இன்னும் அழிந்து விட வில்லை என்பதனை எங்களைச் சூழவுள்ள பல சான்றுகள் என்றென்றும் எங்களுக்கு நினைவூட்டுகின்றது.

இந்த இடத்திலே அழகிய ஒரு கிராமமாக இருந்து தங்களுடைய அன்றாட வாழ்வுக்காக உழைத்த தங்கள் வளங்களைப் பயன் படுத்தி தம் உறவுகளைக் காத்து வந்த எங்கள் மக்கள் இந்த சக்திகளுடைய இராணுவ நடவடிக்கையின் போது பல இன்னல்களைச் சந்தித்து இடம்பெயர்ந்து பல துயர துன்பங்களில் எல்லாம் முகம் கொடுத்து வாழ்ந்த வரலாறும் இவை அனைத்து மே சிங்களப் பேரினவாத சக்திகள் எங்கள் தேசத்தில் தேடிச் சென்ற பெரும் பல வடுக்களாகவே இன்றும் எங்கள் மனத்தில் நிலைத்திருக்கின்றது.

அதே காலப்பகுதியிலும் கூட இராணுவ ரீதியில் எமது தேசியத் தலைவர் அவர்கள் ஒரு பலம் மிக்க சக்தி என்பதனை பல இராணுவ நகர்வின் போது நிரூபித்தி ருக்கின்றார். அவர் நிருபித்த அந்த இராணுவ பலத்தின் மூலம் கிடைத்த அரசியல் இன்றைய பேச்சுவார்த்தை நகர்வுகளும் இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியிலும், சிறிலங்கா பேரினவாத சக்திகள் மத்தியிலும் இன்று அரசியல் போராக பிரகாசித்து நிற்கி ன்றது.

இன்று நடந்து கொண்டிருக்கின்ற சமாதான அரசியல் போர் என்றென்றும் எங்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வினை எட்டித்தராது என்பதனை நாங்கள் எல்லோரும் எங்கள் உள்ளத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்தச் சிங்களப் பேரினவாத சக்திகளும் எங்களுக்கு சுதந்திரத்தினைப் பெற்றுத் தந்து விடமாட்டார்கள். எமது அரசினை நாம் தான் பெற வேண்டும். எமது இன்றைய தேவைக்காக நாங்கள் இந்தத் தேசத்தை ஒரு தலைமையின் கீழ் ஒரு பலமான சக்தியாக நாங்கள் அணி திரண்டு கொள்ள வேண்டும், அணி திரண்டு இருக்கவேண்டும் என்கின்ற நிலைப்பாட்டினை எங்கள் மக்கள் நீங்கள் உள்ளத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

ஈழநாதம்
Eezhanatham

# தம்பிலுவில்லில் இன்று விளையாட்டு விழா!

(சுவேந்திரன்)

''சூரியா'' விளையாட்டுக் கழகமும் பத்மநாதன் நலன்புரி மன்றமும் இணைந்து நடத்தும் பாரிய விளையாட்டுப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு தம்பிலுவில் ஆதவன் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

இந்த விளையாட்டு விழா ஆனது மட்.அம்பாறை அனைத்து விளையாட்டு கழகங்களையும் அழைத்து ஒரு சமாதானத்திற்கான விளையாட்டு எனும் தொனியில் இடம்பெறுகின்றது. இவ்விளையாட்டு நிகழ்ச்சியில் கிரிக்கட், உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடை ப்பந்தாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும்,இறுதி நாள் அன்று பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன. இன்று உதைப்பந்தாட்டம் நடைபெறவுள்ளதென சூரியா விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் சு.விவேகானந்தராஜா தெரிவித்தார்.

# புதிய அரசியல் கட்சியின் தேவைபற்றி மயோன் அணியினர் துண்டுப்பிரசுரம்

(கல்முனை நகர்)

முஸ்லிம் சமூகத்தின் குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்காக போராடுவதை தமது நோக்கமாக கூறி வாக்குகளை பெற்றவர்கள் அதிகாரத்துக்கு வந்தவுடன் கடைப்பிடித்த சர்வதிகார, சுயநலப் போக்குகளே முஸ்லிம்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு தடைகளாய் இருந்த தலையாய காரணிகளாகும். என வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலமும் புதிய அரசியல் கட்சியின் தேவையும் என தலைப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மையோன் முஸ்தபா, ஏ.எல்.எம்.ஜெமில், பொறியியலாளர் எம்.ஐ.எம். லத்தீப் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004.05.27ம் திகதியிட்டு நேற்று அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட இத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தேசிய கட்சிகளை சார்ந்த பிரதிநிதிகள் மூலம் சமூகத்தின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு சாத்தியமற்றது என்பதை தீர்க்கமாக உணர்ந்த முஸ்லிம்கள் குறிப்பாக வட-கிழக்கு முஸ்லிம்கள் என்பதுகளின் இறுதிப் பகுதியில் தனித்துவமான அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு ஈற்றில் வெற்றியும் கொண்டனர்.

துரதிஷ்டமாக தனித்துவமான அரசியல் அமைப்பொன்றை உருவாக்குதிலும் அதனை வலுப்படுத்துவதிலும் வெற்றி கண்ட அளவுக்கு வட-கிழக்கு முஸ்லிம்கள் அவ்வமைப்பின் ஊடாக தம் குறிக்கோளை அடைவதில் வெற்றியடைய முடியாமலாகிவிட்டது. இது ஒரு கசப்பான வரலாற்று உண்மையாகும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி யுனிசெப் துண்டுப்பிரசுரம்

(செ.பேரின்பராசா)

கல்வி மாணவர்களாகிய உங்களின் அடிப்படை உரிமையாகும். இத்தகைய உரிமை மறுக்கப்பட்டால் அதனை தேடிப் பெறுவது உங்களின் கடமையாகும். கல்வியினூடாக மாத்திரமே நீங்கள் நல்வாழ்வு பெறமுடியும் கல்வியைக் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு ஏதாவது காரணத்தினால் உங்களுக்கு கல்வி கிடைக்காமல் இருந்தால் அதனைப் பெற்றுத் தருவது எமது நோக்கு, கல்வியின் மூலம் உங்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்பதே இந்நாட்டினது குறிக்கோளாகும் எனவே கல்வியினால் கிடைக்கும் நற் சிறப்புக்களை நாம் அனுபவிக்க வேண்டும்.

இவ்வாறு- யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்முனை வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு வெளியிட்டுள்ள ''அஸ்தமனங்கள் உதயமாகட்டும்'' எனும் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய வயதில் நீங்கள் பாடசாலைக் கல்வியைப் பெறாமல் இருந்தால் கற்ற கல்வியை இடையில் நிறுத்தியிருந்தால் வேறு ஏதாவது காரணங்களினால் உங்களுக்கு கல்வி மறுக்கப்பட்டால் ஏதாவதாயினும் சரி தடைப்பட்ட உங்கள் கல்வியைத் தொடர ''யுனிசெப்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் நாம் புதிய திட்டங்களை வகுத்திருக்கின்றோம். அதன் மூலம் நீங்கள் புதிய உலகத்தினுள் உலாவர முடியும். நீங்கள் கல்வியோடு உங்கள் குடும்பத்தோடும் அமைதியாகவும் நிம்மதியுடனும் வாழ எமது திட்டம் உங்களுக்கு வழிவகுக்கும்.

எமது திட்டத்தின் மூலம் நீங்கள் முறையான பாடசாலைக் கல்வியைத் தொடரலாம், பற்றிப் பிடித்தல் செயற்றிட்டத்தின் மூலம் கல்வியைப் பெறலாம்.

# இஸ்ஸங்கனி சீமையில் இலவச வைத்திய முகாம்

(ஏ.எல்.றமீஸ்)

தேசிய முகாமைத்துவ சபையின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் யுத்த சூழ் நிலைகளால் பாதிக்கப்பட்ட பின் தங்கிய கிராமமான இஸ்ஸங்கனிச் சீமையில் புதன்கிழமை இலவச மருத்துவ சிகிச்சை முகாம் நடைபெற்றது.

ஏழை மக்களின் நன்மை கருதி நடாத்தப்பட்ட மருத்துவ முகாமில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச வைத்திய சாலைகளில் பணி புரியும் வைத்தியர்கள் கலந்து கொண்டு நோய்களுக்கான நிவாரணிகளையும் வைத்திய ஆலோசனைகளையும் வழங்கினர்.

# சமுர்த்தி பயன்பெறுவோர் மத்தியில் புகைத்தலை கட்டுப்படுத்த நடவடிக்கை

(ஐ.எல்.றாமி)

சமுர்த்தி திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் மத்தியில் புகைத்தல் பழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்று மிக விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் நாள் ஒன்றுக்கு புகைத்தலுக்கு பொதுமக்கள் சுமார் 5 கோடி ரூபாவினை செலவிடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புகைத்தல் பழக்கம் உடையவர்களில் 80 வீதமானவர்கள் கிராம புறத்தை சேர்ந்தவர்கள் என்று அறிய முடிகிறது. இதில் பெரும்பாலானோர் சமுர்த்தி பயன் பெறுவோர் என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டு வீரர்களை பயிற்றுவிப்பதற்கு நிகழ்ச்சித் திட்டம் எதுவுமில்லை!

## -பா.அரியநேத்திரன் எம்.பி.-

(போரதீவுப்பற்று)

எமது மாவட்டத்தில் மிகச் சிறந்த வீரர்களும், வீராங்கனைகளும் உள்ளார்கள். ஆனால் இவர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்று இல்லை. இவ்வாறு போரதீவுப்பற்று பிரதேச விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கடந்த இரண்டு சகாப்தகாலமாக எமது மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேபோன்று கல்வி, மீன்பிடி போன்றவையும் அபிவிருத்தி செய்யாமல் மளுங்கடிக்கப்பட்டன. இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண சபையிடம் நிதி இல்லை. எனக் கூறப்படுகின்றது. இதனால் தான் கையாலாகாத மாகாண சபையைக் கலைத்துவிட்டு தன்னாட்சி அதிகாரம் கொண்ட இடைக்கால நிருவாகசபையை நாம்கோரி நிற்கின்றோம். எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி கதிரவெளி தொடக்கம் துறைநீலாவணை வரை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்நிலையில் விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்தவோ அல்லது விளையாட்டு வீரர்களுக்கான வசதிகளை செய்து கொடுக்கவோ எம்மால் முடியாதுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இடைக்கால நிருவாகசபையைக் கோரி நிற்கின்றோம் என்றார்.

பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய மைதானத்தில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் க.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கனகசபையும் கலந்துகொண்டார். விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.வைரமுத்து நன்றியுரை நிகழ்த்தினார்.

# மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பின் தங்கிய மாவட்டமாக காணப்படுகிறது

## த.கனகசபை எம்.பி.

(செ.பேரின்பராசா)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுள் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. இம் மாவட்டத்தினை சகல துறைகளிலும் அபிவிருத்தி செய்வதற்காக என்னால் இயன்றவரை அயராது பாடுபடுவேன்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கனகசபை குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரியகல்லாறு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு கனகசபை எம்.பி. நன்றி தெரிவித்தார்.

இந்த நன்றி நவிலல் கூட்டம் ஓய்வுபெற்ற ஆசிரியரும், ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை வண்ணக்கருமான மூ.மன்மதராசா தலைமையில் இடம்பெற்றது.

அங்கு கனகசபை எம்.பி. மேலும் பேசுகையில்,

பல இழப்புக்களைச் சந்தித்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் உள்ளனர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் கல்வி நிலை பின்னடைவைக் கண்டுள்ளது. இங்குள்ள பல பாடசாலைகள் ஆசிரிய ஆளணித் தட்டுப்பாடு, பௌதீகவளத் தட்டுப்பாடு என்பவற்றுடன் இயங்கி வருகின்றன. இதனால் எமது மாணவ சமூகம் எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாத அளவுக்கு புறந்தள்ளப்பட்டுள்ளமை வேதனைதரும் செயலாகும்.

நிலைமை இவ்வாறிருக்க அரசாங்கமானது மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வியில் முன்னேறிய மாவட்டமாக கணித்துள்ளமை மிகவும் கவலை தரும் செயலாகும்.இதனை மாற்றியமைக்க நாம் அனைவரும் போராட வேண்டும்.

குறிப்பாக எமது மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி, கல்விக் கல்லூரி அனுமதி என்பவற்றில் உள்ள இடர்பாடுகளைப் போக்கி என்னால் முடிந்தவரை பாடுபடுவதுடன் எனது வெற்றிக்காக உழைத்த பெரியகல்லாறு வாழ் மக்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும் என்றார்.

இந்நிகழ்வில் க.செல்வராசா உட்பட பலர் உரையாற்றினர்.

---

**மட்டு...**

விடுதலைப்புலிகளின் சந்திப்பில் ஏற்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற இச்சந்திப்பில் சேனாதிராசா மேலும் கூறுகையில்,

படையினர் கட்டுப்பாட்டுப் பகுதியில் தற்போது நடைபெறும் படுகொலைகள் காரணமாக பொதுமக்கள் படைத்தரப்பினரையும் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவபர்களையுமே சந்தேகிக்கின்றனர்.

இதனால் மீண்டும் யுத்தத்திற்கு தூபமிடுகின்றனர் என்றும் சந்தேகம் ஏற்டுகிறது. அத்துடன் பொது மக்களின் இயல்பு நிலையும் பாதிப்படைந்துள்ளது. எனவே கொலையாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்த முடியும்.

எனவே சிறிலங்காப் படையினரும் பொலிசாரும் இவ்விடயத்தில் அதிக சிரத்தையெடுத்து கொலைச் சம்பவங்கள் நிகழா வண்ணம் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இயல்பு நிலை ஏற்படும் அதன் மூலம் சமாதானத்தை முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் அனுசரணையுடன் நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் பட்டிருப்பு கோட்ட அரசியல் பொறுப்பாளர் செல்வன்,மற்றும் மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படைத்தரப்பில் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க, மேஜர் சமந்த, மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் கீரகல்ல, மட்டக்களப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்காணிப்புக் குழு தரப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிரதித் தலைவர் பேர்வான்ரன்முஷன் மற்றும் றூவார் ஹெறால்ம் ஆகியோர் பங்குபற்றினர்.

---

**கிழக்கு...**

சகல மாணவர்களுக்குமான விரிவுரைகள் இம்மாதம் 14ம் திகதியே ஆரம்பமாகும் என்று பதில் உபவேந்தர் கலாநிதி எஸ்.ரவீந்திரநாத் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக பட்டமளிப்பு முன்னர் தீர்மானித்தபடி இம்மாதம் 5ம் திகதி சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் ஆடம்பரங்கள் இன்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற இருப்பதாகவும் பதில் உபவேந்தர் தெரிவித்தார்.

---

**பாவனைக்குதவாத...**

சார் இவ்விடயங்களையிட்டு கவனமெடுக்காமல் வெறுமனே தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள்களை ஓட்டுவோரை மட்டும் கண்காணிக்காமல் இவ்விடயத்திலும் கூடிய கவனமெடுக்க வேண்டுமென பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.